

திருப்பத்தூர் மாவட்டம், மாதனூர் ஊராட்சி ஒன்றியஅரசினர் மேல்நிலைப் பள்ளியில் 157 மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினரும், மாதனூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளருமான, அ.செ.வில்வநாதன் வழங்கினார். நிகழ்ச்சியில் மாதனூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர் ஜி.ராமமூர்த்தி, மாதனூர் ஊராட்சி மன்ற தலைவர் ஜெ.ரவிக்குமார், ஒன்றிய குழு உறுப்பினர் பரிமளாகார்த்திக் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தாதேவி முன்னிலையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் சேலம் கோட்டம் சார்பில் புதிய BS6 மகளிர் விடியல் பயணம் பேருந்துகள், பேருந்துகள் வழித்தடங்கள் நீட்டிப்பு, மூன்று வழிதடத்தில் கூடுதல் பேருந்து நிறுத்தம் மற்றும் நகரப் பேருந்துகள் வழித்தட மாற்ற சேவைகளை சேலம் நகர பேருந்து நிலையத்திலிருந்து நேற்று (28.11.2025) துவக்கி வைத்தார். உடன், சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் வெ.குணசேகரன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

## சேலம் மாவட்டத்தில் – பணிக் காலத்தில் உயிரிழந்த

# அரசு பே ாக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் வாரிசுகளுக்கு பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கி – பேச்சு!

சேலம்,நவ.29-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.இரா.பிருந்தா தேவி, முன்னிலையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் சேலம் கோட்டம் சார்பில் புதிய BS-6 மகளிர் விடியல் பயண பேருந்துகள், வழித்தடங்கள் நீட்டிப்பு, நகரப்பேருந்துகள் வழித்தட மாற்றம், வழித்தடத்தில் கூடுதல் பேருந்து நிறுத்த சேவைகளை சேலம் பழைய பேருந்துநிலையத்திலிருந்து துவக்கி வைத்து, பணிக்காலத்தில் உயிரிழந்த அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணையினை நேற்று (28.11.2025) வழங்கினார்.

பின்னர் அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தாவது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அறிவித்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயனடையும் வகையில் பழைய பேருந்துகளை மாற்றம் செய்து, அதற்கு பதிலாக புதிய வகை பேருந்துகளாக இயக்கிடவும், கிராமப்புறத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவிகள், மகளிர், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பயன்பெறும் வகையில் தேவைக்கேற்ப புதிய வழித்தடங்கள் மற்றும் ஏற்கனவே இயங்கி வந்த வழித்தடங்களை நீட்டிப்பு செய்து பேருந்து சேவை கிடைத்திடவும் வழிவகை செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் சார்பில் இதுவரை 173 புதிய BS-6 நகரப் பேருந்துகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் உள்ளிட்ட சேலம் கோட்டத்தில் 180 மகளிர் விடியல் பயணப் பேருந்துகள், 195 புறநகரப் பேருந்துகள் என மொத்தம் 375 பேருந்துகளையும் இயக்கி வைத்துள்ளார்கள். மேலும், மகளிர் விடியல் பயணத்திட்டத்தின்கீழ் 42.46 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்தவகையில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், சேலம் கோட்டம் சார்பில், சேலம் நகர பேருந்து நிலையத்தில் பொது மக்கள் பயன்பாட்டிற்காக 10 புதிய BS-6 நகரப் பேருந்துகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மற்றும் பணிக்காலத்தில் உயிரிழந்த அரசு போக்குவரத்துக் கழக பணியாளர்களின் 22 வாரிசுகளுக்கு ஓட்டுநர் / நடத்துனர் பணிக்கான ஆணை (கருணை அடிப்படையில் வேலை வாய்ப்பு) வழங்கப்பட்டது.

மேலும், பள்ளி மாணவ மாணவிகள், மகளிர் மற்றும் பொதுமக்கள் பயன் பெறும் வகையில் 8 நகரப் பேருந்துகள் வழித்தடம் மாற்றம் செய்தும், 12 நகரப் பேருந்துகள் வழித்தடம் நீட்டிப்பு செய்தும், 2 புறநகர் பேருந்துகள் 1 நகர பேருந்து மூலம் 3 புதிய பேருந்து நிறுத்தங்களும் கொடியசைத்துத் துவக்கி வைக்கப்பட்டது. மேலும், அரசாணையின் மூலம் பணியமர்வில் மகளிருக்கான உயரம் 150 செ.மீ ஆக குறைக்கப்பட்டது. இதனால் 36 மகளிர் தற்போது வரை பயனடைந்துள்ளனர்.


இதில், நகரப்பேருந்து வழித்தட மாற்றம் வாழப்பாடியிலிருந்து கரடிப்பட்டி, சொக்கநாதபுரம், நரசிங்கபுரம் வழியாக ஆத்தூர் வரையிலும், சேலம் நகரப் பேருந்து நிலையத்திலிருந்து கருப்பூர், வெள்ளாளப்பட்டி வழியாக ஜில்லாகரடு பிரிவு வரையிலும், ஓமலூரிலிருந்து தீவட்டிப்பட்டி, நடுப்பட்டி வழியாக உம்பிளிக்கம்பட்டி வரையிலும், மேட்டூரிலிருந்து நங்கவள்ளி, சாணார்பட்டி வழியாக ஜலகண்டாபுரம் வரையிலும், சங்ககிரியிலிருந்து R.S, ஆணைக்கல்பாளையம், கோழிக்கால்நத்தம் வழியாக திருச்செங்கோடு வரையிலும், திருச்செங்கோட்டி லிருந்து கோழிக்கால்நத்தம், ஆணைக்கல்பாளையம், ஆர்.எஸ். வழியாக சங்ககிரி வரையிலும்,

ஓமலூரிலிருந்து பண்ணப்பட்டி, மாரக்கவுண்டன்புதூர், டேனிஷ் பேட்டை வழியாக பெரியவடகம்பட்டி வரையிலும், ஓமலூரிலிருந்து பண்ணப்பட்டி, மாரக்கவுண்டன்புதூர், டேனிஷ் பேட்டை வழியாக பெரிய வடகம்பட்டி வரை இயங்கும் வகையிலும், அடிவாரம்/கன்னங்குறிச்சி வழிதடத்தில் நகரப்பேருந்துகளுக்கு சேலம் மாநகர சுகவனேஸ்வரர் கோவில் பேருந்து நிறுத்தம், சாதாரண கட்டண புறநகர் பேருந்துகள் மூலம் ஓமலூர்- ஈரோடு வழித்தடத்தில் சீராய்க்கடை பேருந்து நிறுத்தம் மற்றும் சேலம் - தர்மபுரி வழித்தடத்தில் தாசசமுத்திரம் அக்ரஹாரம் பேருந்து நிறுத்தம் வரை துவக்கி வைக்கப் பட்டது.

மேலும், ஓமலூர் கிளை வழித்தட பேருந்து ஓமலூரிலிருந்து காமனேரி, ஒண்டிவீரனூர் வழியாக பாரதிபுரத்திற்கும், சேலம் நகரப் பேருந்துநிலையத்திலிருந்து கஞ்சநாயக்கன்பட்டி வழியாக கோவிந்தாகவுண்டனூருக்கும், ஓமலூரிலிருந்து லோக்கூர் வழியாக கணவாய்புதூருக்கும், சேலம் நகரப் பேருந்து நிலையத்திலிருந்து பண்ணப்பட்டி வழியாக தின்னப்பட்டிக்கு இரண்டு பேருந்தும், ஓமலூரிலிருந்து வே.கொங்காரப்பட்டி வழியாக முத்தம்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளிக்கும், ஆத்தூரிலிருந்து தலைவாசல், பாரதிநகர் வழியாக சிறுவாச்சூருக்கும், மேச்சேரியிலிருந்து வெள்ளார் வழியாக கஸ்தூரி கோம்பைக்கு இரண்டு பேருந்தும், சேலம் நகரப் பேருந்துநிலையத்திலிருந்து கருப்பூர், வெள்ளாளப்பட்டி வழியாக ஜில்லா கரட்டிற்கும், மேட்டூர் - சென்னம்பட்டி சனிச்சந்தையில் இரவு தங்கல் செய்திடுமாறும், வாழப்பாடி - திருமனூர் - கம்மாளப்பட்டியில் இரவு தங்கல் செய்திடுமாறும் வழித்தட நீட்டிப்பு செய்தும், பேருந்து இயக்கம் துவக்கி வைக்கப்பட்டது.

இவ்வாறு அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் வெ.குணசேகரன், பொது மேலாளார் (தொழில் நுட்பம்) ந.கலைவாணன், முதுநிலை துணை மேலாளர் (மனித வள மேம்பாடு) க.ராஜராஜன் மற்றும் தொழிலாளர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், தொழிற்சங்க பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி முன்னிலையில் சேலம், பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பள்ளி கல்வித்துறை சார்பில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு அரசு உதவி பெறும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இடையேயான மாநில அளவிலான கலைத்திருவிழா போட்டிகளை நேற்று (28.11.2025) தொடங்கி வைத்தார். உடன், சேலம் மேற்கு சட்டமன்ற உறுப்பினர் இரா.அருள், முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி ப.மகேஸ்வரி, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தாளாளர் சத்தியமூர்த்தி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

## தமிழ்நாடு மின் கழக தொழிலாளர் முன்னேற்றச் சங்கம் சார்பில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## மின் கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பா.மணிமாறன் நல உதவிகள் வழங்கினார்!

சென்னை, நவ. 29-

தமிழ்நாடு மக்களின் நம்பிக்கை நட்சத்திரம், இளைஞர்களின் எழுச்சி நாயகர், திராவிட போர்வாள், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளில், மின்கழகத் தொமுச சார்பில் நல உதவிகள், பொதுச்செயலாளர் பா.மணிமாறன் வழங்கினார்.



தமிழ்நாடு மின்சார வாரியம், தலைமை அலுவலகத்தில் பணிபுரியும், தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் ஆகியோர்களுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு காலையில் இனிப்புகள் வழங்கப்பட்டன. பின்னர் தமிழ்நாடு மின்கழகத் தொமுச தலைமைச் சங்க அலுவலகத்தில் மதியம் மின்சார வாரியத்தில் பணிபுரியும் காவல் பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள், பொதுமக்கள் என 300 பேர்களுக்கு ரூ. 2000 மதிப்புள்ள நல உதவிகள், சமையலுக்குத் தேவையான தரமான அரிசி, மளிகை பொருட்கள் அடங்கிய தொகுப்பு பைகளில், பொதுச்செயலாளர் பா.மணிமாறன் வழங்கினார்.

தொழிலாளர் நலன் பாதுக்காக்கும் திராவிட மாடல், தமிழ்நாடு முதலமைச்சர் அன்புத்தளபதி அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்கு செய்யும் சாதனைகளுக்கு எல்லாம் துணை நின்று உழைக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் சாதனைகளையும், அங்கு கூடியிருப்பவர்களிடம் பொதுச்செயலாளர் பா.மணிமாறன் எடுத்துரைத்தார்.

தமிழ்நாட்டில் மகளிர்களுக்கு விடியல் பயணம், மகளிர் வாழ்வை மேம்படுத்திய கலைஞர் உரிமைத்தொகை, பள்ளி குழந்தைகள் பசியாற காலை உணவுத்திட்டம், புதுமைப்பெண், நான் முதல்வன், தமிழ் புதல்வன், இலவச வீட்டு மனை வழங்கும் திட்டம், உங்கள் தொகுதியில் ஸ்டாலின், மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் 48, முதல்வேளாண் நிதி நிலை அறிக்கை, இல்லம் தேடிக் கல்வி, பசுமைத் தமிழ்நாடு இயக்கம், உள்ளிட்ட பல திட்டங்களை செயல்படுத்தி, தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு மக்களையும் முன்னேற்றப் பாதையில் அழைத்து சென்று கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டுத் துறை அமைச்சராகப் பொறுப்பு ஏற்று தமிழ்நாட்டில் பல வீரர்களையும், வீராங்கனைகளையும் உருவாக்கி, இந்தியாவில் மட்டுமல்லாது அகில உலக அளவில் அவர்கள் பல பதக்கங்களை பெற ஊக்கப்படுத்திக் கொண்டிருக்கிறார். இந்தியா உலக அளவில் நடைபெறும் போட்டி களில் தமிழ்நாடு அரசு சார்பில் கலந்துக்கொள்ள வைத்து அவர்களின் திறமையை வெளிகொண்டு வந்து வெற்றி பெற காரணமாக தமிழ்நாடு இளைஞர்களின் வாழ்க்கையில் ஏற்றம் பெற வைத்து அவர்களுக்குள் இருந்த அறிவுதிறனை வெளியே கொண்டு வந்து, அவர்கள் வாழ்க்கையில் விடியலை ஏற்படுத்தி அவர்களது குடும்பத்தி னரையும் பெருமைப்படுத்தி, அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தினார்.

இவ்வாறு பா.மணிமாறன் கூறினார்.




இராஜபாளையம் தொகுதியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாசறை ஆனந்த் ஏற்பாட்டில் இராஜபாளையம் அரசு மகப்பேறு மருத்துவமனையில் 27.11.2025 அன்று பிறந்த 6 குழந்தைகளுக்கு தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ், எஸ்.தங்கப்பாண்டியன் எம்.எல்.ஏ, பவித்ராஷியாம் தங்க மோதிரம் அணிவித்தனர். அதனைத் தொடர்ந்து விருதுநகர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பில் அரசு மருத்துவ மனையில் கேக் வெட்டி, உள்நோயாளிகளுக்கும், கர்ப்பிணி பெண்களுக்கும் ஊட்டச்சத்துப் பொருட்களும், மருத்துவமனையில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு புத்தாடைளை கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ், எஸ். தங்கபாண்டியன் எம்.எல்.ஏ, பவித்ராஷியாம் வழங்கினார்கள். இந்நிகழ்வில் கே.கே.எஸ்.வி.டி.சுப்பராஜ், ராமமூர்த்தி மணிகண்டராஜா, இளங்கோவன், சேர்மன் பாலசுப்பிரமணியன், சுமதிராமமூர்த்தி, வேல்முருகன், துரைகற்பகராஜ், ஆனந்த் கார்த்திக், செல்வமணி, பாஸ்கர், முத்துசெல்வி மற்றும் கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.